நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

இடைநிலை மத்தியப் பிரிவு - (ஆண்டு 7,8)

Level : Mid Intermediate (Year 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

Time Given : 90 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை - 2021
# இடைநிலை மத்தியப் பிரிவு - (ஆண்டு 7,8)

## பின்வரும் 1 முதல் 5 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

(புள்ளிகள் 5 × 1 = 5)

01. கண்ணன் மிகவும் மொழியாற்றல் மிக்கவன்.

(அ) மொ + ஆற்றல் (இ) மொழி + யாற்றல்

(ஆ) மொழி + ஆற்றல் (ஈ) மொழியாற் + ஆல்

02. வீரபாண்டிய கட்டப்பொம்மனின் அரசாட்சி தமிழர்களின் வீரத்திற்கு சான்றாகும்.

(அ) அர + சாட்சி (இ) அரசு + ஆட்சி

(ஆ) அரசு + யாட்சி (ஈ) அரச + ஆட்சி

03. சிட்னி மாநகரத்துக்கு நேற்றிரவு சென்றிருந்தோம்.

(அ) நேற்றி + இரவு (இ) நேற்று + இரவு

(ஆ) நேற் + இரவு (ஈ) நேற்றி + ஈரவு

04. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் கண்ணெழுத்துக்கள் என அழைக்கப்பட்டன.

(அ) கண் + எழுத்துக்கள் (இ) கண்கள் + எழுத்துக்கள்

(ஆ) கன் + எழுத்துக்கள் (ஈ) கண் + ணெழுத்துக்கள்

05. காடெல்லாம் அழிந்து விட்டால் உயிரினங்கள் வாழ்வது கடினம்.

(அ) காடு + டெல்லாம் (இ) கான் + எல்லாம்

(ஆ) கா + டெல்லாம் (ஈ) காடு + எல்லாம்

## பின்வரும் 6 முதல் 10 வரையிலான வினாக்களில் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

(புள்ளிகள் 5 × 1 = 5)

06. காலையில் **கதிரவன்** கிழக்கே உதிக்கும்.

(அ) ஒரு பெயர் (இ) மதி

(ஆ) நிலவு (ஈ) சூரியன்

07. **அகத்தின்** அழகு முகத்தில் தெரியும்.

(அ) உள்ளத்தின் (இ) சிரிப்பின்

(ஆ) பெண்மையின் (ஈ) புறத்தின்

08. தமிழ்மொழிக்கென சில **மரபுகள்** உள்ளன.

(அ) சிறப்புகள் (இ) வழக்கங்கள்

(ஆ) பாட்டுகள் (ஈ) அணிகள்

09. **நோய்** இல்லாமல் வாழ உடற்பயிற்சி அவசியம்.

(அ) அணி (இ) பணி

(ஆ) பிணி (ஈ) மணி

10. ஜனாதிபதி அப்துல் கலாம் விண்வெளி **ஆராய்ச்சி** நிறுவனத்தில் பணிபுரிந்தார்.

(அ) ஆய்வு (இ) அறிவு

(ஆ) ஒய்வு (ஈ) அறம்

**பின்வரும் 11 முதல் 15 வரையிலான வினாக்களில் வசனங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க?** (புள்ளிகள் 5 × 1 = 5)

11. ஒரு புறாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தனது உயிரை அர்ப்பணிக்கத் துணிந்த மன்னன்

(அ) ராஜ ராஜ சோழன் (இ) பாரி
(ஆ) அதியமான் (ஈ) சிபிச்சக்கரவர்த்தி

12. மலையும் மலை சார்ந்த இடமும்

(அ) குறிஞ்சி (இ) பாலை
(ஆ) மருதம் (ஈ) நெய்தல்

13. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்

(அ) நக்கீரர் (இ) ஔவையார்
(ஆ) இளங்கோவடிகள் (ஈ) கோவலன்

14. முற்காலத்தில் செய்திப் பரிமாறல்கள்

(அ) நடைபெறவில்லை (இ) பறவைகள் மூலம் நடைபெற்றன
(ஆ) தொலைபேசி மூலம் நடைபெற்றன (ஈ) தபால் மூலம் நடைபெற்றன

15. தமிழ் வருடத்தின் முதல் மாதம்

(அ) புரட்டாசி (இ) மார்கழி
(ஆ) சித்திரை (ஈ) தை

**பின்வரும் 16 முதல் 20 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க:**

(புள்ளிகள் 5 × 1 = 5)

16. (அ) கங்கை (இ) யமுனை
(ஆ) காவேரி (ஈ) மருதம்

17. (அ) முத்து (இ) பவளம்
(ஆ) மீன் (ஈ) வைரம்

18. (அ) தட்டு (இ) பாத்திரம்
(ஆ) கத்தி (ஈ) குவளை

19. (அ) சிறுமை (இ) வெண்மை
(ஆ) பசுமை (ஈ) நீலம்

20. (அ) தென்னை (இ) நெற்பயிர்
(ஆ) பனை (ஈ) ஆலமரம்

**பின்வரும் 21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க:**

(புள்ளிகள் 5 × 1 = 5)

21. விளையும் பயிரை __________________ தெரியும்

(அ) வேரிலே (இ) முளையிலேயே
(ஆ) பழத்திலே (ஈ) பூவிலே

22. பூனையில்லா வீட்டில் __________________ கொண்டாட்டம்

(அ) கிளிக்குக் (இ) எலிக்குக்
(ஆ) நாய்க்குக் (ஈ) அணிலுக்குக்

23. வெளுத்ததெல்லாம் ____________________

(அ) உணவல்ல (இ) நெய்யல்ல

(ஆ) மோரல்ல (ஈ) பாலல்ல

24. "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல்" என்பதை உணர்த்தும் பழமொழி

(அ) கனிந்த பழம் தானே விழும் (இ) அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும்

(ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் (ஈ) அடாது செய்தவன் படாது படுவான்

25. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழியின் பொருள்

(அ) ஒற்றுமையே பலம் (இ) ஒற்றுமை பயனற்றது

(ஆ) விடாமுயற்சி (ஈ) முயற்சி

**பின்வரும் 26 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிற்கும் முதல் வாக்கியத்தின் (அ) கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை (ஆ) நிறைவு செய்க:**

(புள்ளிகள் 4 × 2 = 8)

26. (அ) பல்லவ அரசனால் மகாபலிபுர சிற்பக் கோயில்கள் அமைக்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவோம்.

(ஆ) மகாபலிபுர ____________________

27. (அ) தகவல்களைப் பரிமாற உதவும் சாதனங்கள் ஊடகங்கள்

(ஆ) ஊடகங்கள் ____________________

28. (அ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ குறிஞ்சிப் பூ

(ஆ) குறிஞ்சிப் பூ ____________________

29. (அ) நீதி நெறி தவறாது சோழ மன்னன் ஆட்சி நடத்தினான்

(ஆ) சோழ மன்னன் ____________________

**பின்வரும் 30 முதல் 33 வரையுள்ள வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களை தமிழுக்கும், தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்து எழுதுக.**

(புள்ளிகள் 4 × 2 = 8)

30. இந்த பூமி இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தமானது.

____________________

31. விளையாட்டினால் உடல் மற்றும் மன ஆரோக்கியம் பெருகும்.

____________________

32. We went to our native place this vacation.

____________________

33. My mom is taller than me.

____________________

**பின்வரும் 34 முதல் 38 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட எழுத்துப் பிழையுள்ள சொற்களை திருத்தி எழுதுக:** (புள்ளிகள் 5 × 2 = 10)

தமிழர்கள் உலகமெங்கும் பரந்து வாழ்வதால் (34) **உடகங்களின்** பங்கு மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இருந்தாலும் ஊடகங்கள் எல்லா மக்களுக்கும் (35) **நண்மையையே** பயக்கின்றன என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. (36) **இழைஞர்களைத்** தவறான பாதையில் வழிநடத்தக் கூடிய பல தகவல்கள் பரிமாறப்படுகின்றன. வியாபார நோக்கத்திற்காக தவறான தகவல்களும், (37) **கானொளிகளும்** ஊடகங்களில் அதிகளவில் வந்து கொண்டேயிருக்கின்றன. அன்னபட்சியானது எப்படிப் பாலையும் (38) **நீறையும்** பிரித்து அருந்துகின்றதோ அதே போல ஒவ்வொருவரும் எது சரி, எது பிழை என்பதை பகுத்தாராய்ந்து தமக்கு நன்மை தரக்கூடிய விடயங்களை மட்டுமே ஊடகங்களின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

34. ____________________ 37. ____________________

35. ____________________ 38. ____________________

36. ____________________

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்துக் கீழ்வரும் 39 முதல் 43 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:** (புள்ளிகள் 5 × 3 = 15)

மலைக்கோட்டை, இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இது அமைந்துள்ள மலைப்பாறை 273 அடி உயரம் கொண்டது. நிலவியல் அடிப்படையில், இப்பாறை ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது.

ஒரு தொல்பழங்கால மலைப்பாறை ஒன்றன்மீது கட்டப்பட்ட கோட்டை, கோயில்களைக் கொண்ட ஒரு தொகுதி ஆகும். நடுவில் ஒரு மலையும், அதைச் சுற்றிக் கோட்டையும் அமைந்துள்ளதால் மலைக்கோட்டை என்று அழைக்கப்படுகிறது.

இம்மலையில் கி.பி 580ல் உருவாக்கப்பட்ட பல்லவர் காலக் குகைக் கோவிலும், பாண்டியர் கால குடவரைக் கோவிலும் உள்ளன.
இக்கோட்டை பல வரலாற்று நிகழ்வுகளின் களமாக இருந்துள்ளது. இக்கோட்டை, நாயக்கர்களுக்கும் பிஜாப்பூர், கர்நாடகம் மற்றும் மராத்திய அரசுகளுக்கும் இடையே இடம்பெற்ற பல போர்களைக் கண்டுள்ளது. இந்தியாவில் பிரித்தானியப் பேரரசு காலூன்றுவதற்கு அடிப்படையாக அமைந்த கர்நாடகப் போர்களில் இக்கோட்டை முக்கிய பங்கு வகித்துள்ளது.

39. குகைக் கோயில் எப்பொழுது யாரால் உருவாக்கப்பபட்டது?

______________________________

40. மலைக்கோட்டை என்று பெயர் பெறக் காரணம் என்ன?

______________________________

41. கர்நாடகப் போர்களில் இக்கோட்டையின் பங்கு என்ன?

______________________________

42. மலைக்கோட்டையின் புவியியல் அமைப்பை விளக்குக?

______________________________

43. மலைக்கோட்டை கண்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் யாவை?

______________________________

கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து 44 முதல் 48 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக:




(புள்ளிகள் 5 × 1 = 5)

44. இந்த விழா யாரால் நடத்தப்பட்டது?

____________________________

45. இந்நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட தமிழிசைகருவிகள் இரண்டினை எழுதுக?

____________________________

46. நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கான அனுமதிக் கட்டணம் எவ்வளவு?

____________________________

47. இசை நிகழ்ச்சியில் பாடிய முக்கிய பிரமுகர்கள் யாவர்?

____________________________

48. தமிழ்ச்சங்கம் 'இன்றே செய்வீர்' என அறிவுறுத்தும் செயல் என்ன?

____________________________

**பின்வரும் 49ஆம் வினாவில் பேச்சு வழக்கில் உள்ள சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றுக:**

(புள்ளிகள் 9 × 1 = 9)

49. ஒரு (அ) **மனசனுக்கு** அடிப்படை தேவை நல்ல உடல் நலம். (ஆ) **உடல** வலுவாக வைத்துக் கொள்வதற்காக மனிதன் பல விளையாட்டுகளை (இ) **கண்டுபிடிச்சான்.** நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெற (ஈ) **உணவுல** கவனமும், சுத்தமும், சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலும், முறையான உடற்பயிற்சியும் தேவை. உடற்பயிற்சி உடலை (உ) **சுறுசுறுப்பா** வைக்கிறது. சோம்பேறித்தனத்தை (ஊ) **போக்குது.** நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. கடும் (எ) **நோய்கள்ளஇருந்து** உடலைப் பாதுகாக்கிறது. உடற்பயிற்சி என்பது நமது ஆரோக்கியத்துக்கு (ஏ) **ரொம்ப** முக்கியமான ஒன்று. ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் உடற்பயிற்சி என்பதை மறந்து (ஐ) **வாழ்ந்திட்டு** இருக்கிறோம்.

ஒரு (அ) ..................................... அடிப்படை தேவை நல்ல உடல் நலம். (ஆ) ..................................... வலுவாக வைத்துக் கொள்வதற்காக மனிதன் பல விளையாட்டுகளை (இ) ..................................... நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெற (ஈ)..................................... கவனமும், சுத்தமும், சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலும், முறையான உடற்பயிற்சியும் தேவை. உடற்பயிற்சி உடலை (உ)..................................... வைக்கிறது. சோம்பேறித்தனத்தை (ஊ) ..................................... நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. கடும் (எ)..................................... உடலைப் பாதுகாக்கிறது. உடற்பயிற்சி என்பது நமது ஆரோக்கியத்துக்கு (ஏ)..................................... முக்கியமான ஒன்று. ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் உடற்பயிற்சி என்பதை மறந்து (ஐ) ..................................... இருக்கிறோம்.

## கட்டுரை எழுதுதல்

(புள்ளிகள் 20)

50. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **<u>ஒன்றைத்</u>** தெரிவு செய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக:

(அ) உங்களது தனித்திறமைகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து அதனை விளக்கிக் கட்டுரை எழுதுக.

(ஆ) கடந்த ஆண்டு முதல் இன்றுவரை அன்றாடப் பள்ளி நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி கட்டுரை ஒன்று எழுதுக.

(இ) சமீபத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்ட உங்கள் அனுபவத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
(உதாரணம்:- இசை விழா, கலை விழா, திருமணம், பிறந்த நாள் போன்றவை அவ்விழா நடைபெற்ற முறை, விழாவின் சிறப்புகள், சந்தித்த மக்கள், உங்களைக் கவர்ந்த விடயங்கள்)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

DR VENTHANAR ILANGO MEMORIAL
TAMIL PROFICIENCY EXAMINATION

2021

Email:info@nswfts.org.au
www.nswfts.org.au